# பத்திரிக்கை செய்தி

## பட்டா வழங்க லஞ்சம் வாங்கிய கிராம நிர்வாக அலுவலருக்கு 4 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனையும் மற்றும் ரூ.20,000/-ம் அபராதமும் விதித்து தீர்ப்பு

திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் வட்டம் பொத்தூர் கிராமத்தில் உள்ள பொதிகை நகரில் மனை எண் 171 மற்றும் 172-ல் 1500 சதுர அடி இடத்தை அவரது பெயரில் கிரையம் பெற்று பட்டா மாறுதல் பெற வேண்டி திருமதி.K.சுலோச்சனா, W/o.C.கலைசெல்வன் என்பவர் 09.01.2012 -ந் தேதி பொத்தூர் கிராம நிர்வாக அலுவலர் திரு.K.கந்தசுவாமி (வயது 67/2023) என்பவரை நேரில் சந்தித்து மனு கொடுத்தபோது கிராம நிர்வாக அலுவலர் பட்டா வழங்க ஏற்பாடு செய்யவேண்டும் என்றால் தனக்கு ரூ.5000/- லஞ்சமாக கொடுத்தால் தான் பட்டா வழங்க ஏற்பாடு செய்வேன் என்று தெரிவித்துள்ளார். பின்னர் புகார்தாரர் திருமதி.K.சுலோச்சனா, 15 நாட்கள் கழித்து சார் பட்டா ரெடியாகிவிட்டதா என்று கேட்டதற்க்கு இரண்டு வாரங்கள் கழித்து தொலைபேசியல் பேசுங்கள் என்று கூறிவிட்டதால் அதன்படி 07.02.2012 ம் தேதி பட்டா குறித்து கேட்டதற்க்கு தானே சொல்கிறேன் என்று கூறி ரூ.5000/- லஞ்சமாக கொடுத்தால் தான் பட்டா வழங்குவேன் என்று கராராக கூறியதால், மனுதாரர் திருமதி.K.சுலோச்சனா, என்பவர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை சென்னை நகர பிரிவு-I அலுவலகத்திற்கு வந்து பொத்தூர் கிராம நிர்வாக அலுவலர் திரு.K.கந்தசுவாமி என்பவர் பட்டா வழங்க ரூ.5000/- லஞ்சம் கேட்பதாக கொடுத்த புகாரின் அடிப்படையில் திரு..K.கந்தசுவாமி, கிராம நிர்வாக அலுவலர் என்பவர் மீது சென்னை லஞ்ச ஒழிப்பு துறையில் 08.02.2012-ந் தேதி வழக்கு பதிவு செய்யப்பட்டு, பொறி வைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, அன்றைய தினமே, புகார்தாரர் திருமதி.K.சுலோச்சனா என்பவரிடம் எதிரி திரு.கந்தசுவாமி அவர்கள் பணிபுரியும் அலுவலகத்தில் லஞ்சப்பணம் ரூ.5000/-ஐ கேட்டு பெற்றபோது கையும் களவுமாக பிடிபட்டவரை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்பட்டது. இவ்வழக்கில் சாட்சிகளை விசாரணை செய்து எதிரி திரு.கந்தசுவாமி என்வரின் மீது திருவள்ளூர் முதன்மை குற்றவியல் நடுவர் மற்றும் சிறப்பு நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை எதிரி மீது தாக்கல் செய்யப்பட்டது. மேற்படி வழக்கினை மாண்புமிகு திருவள்ளூர் முதன்மை குற்றவியல் நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி விசாரணை செய்து இன்று 30.01.2023-ந்தேதி எதிரி திரு.கந்தசுவாமி என்பவர் புகார்தாரரிடமிருந்து லஞ்சமாக பணம் கேட்ட குற்றத்திற்காக 4 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனையும், மற்றும் ரூ.20,000/-ம் அபராதமும், மேலும் பணத்தை கேட்டு பெற்றுக்கொண்ட குற்றத்திற்காக 4 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனையும், ரூ.20,000/-ம் அபராதமும் விதித்து உத்திரவிடப்பட்டது.